# பிரதான தகவல் கூற்று மற்றும் சேவை விபரக் கையேடு

| கணக்கின் பெயர் | MCB Al Makhraj சேமிப்புக் கணக்கு (Mudaraba) |
|---|---|
| விபரம் | இலாபப் பகிர்வு கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை மற்றும் வங்கியின் முதலீட்டுத் தொகுப்பிலிருந்து ஈட்டப்படும் இலாபத்தில் ஒரு பங்கை வழங்குகின்றன. இஸ்லாமிய கொள்கைகளின் அடிப்படையில் சேமிப்புக் கணக்கை விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு, அவர்களின் நிதியில் ஆரோக்கியமான வருமானத்துடன் அல் மக்ராஜ் சேமிப்புக் கணக்கை (முதரபா) நாங்கள் வழங்குகிறோம். |
| நாணயம் | இலங்கை ரூபா. |
| முக்கிய விடயங்கள் | ஆரம்ப வைப்பு : 1,000/- |
| | சமீபத்திய இலாப விகிதங்களுக்கு, https://www.mcb.com.lk/islamic-banking/ ஐப் பார்வையிடவும் |
| இலாபக் கொடுப்பனவு வழங்கும் கால இடைவெளி | மாதாந்தம் |
| நன்மைகள்/ பெறுமதி சேர் சேவைகள் | மீளப் பெறுவதற்கான எண்ணிக்கையில் எவ்விதமான வரையறையும் இல்லை |
| | நாடளாவிய ரீதியில் காணப்படும் 4500க்கும் மேற்பட்ட தானியங்கி டெலர் இயந்திரங்கள் (ATMs) மூலம் உங்கள் கணக்கை அணுகுவதற்கான வசதி (Lankapay) |
| | POS அணுகலுடன் கூடிய பற்று அட்டைகள் (JCB / Lankapay) |
| | மொபைல் பேங்கிங் செயலி மூலம் உங்கள் பரிவர்த்தனைகளைச் செய்ய பாதுகாப்பான மற்றும் எளிதான அணுகல் (தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கான சேவை உள்ளதுடன் பதிவு அவசியமாகும்) |
| | குறுஞ்செய்தி விழிப்பூட்டல்கள் (தானியங்கி) மற்றும் இலத்திரனியல் கூற்று வசதி (பதிவு அவசியமாகும்) |
| கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் | தற்போதைய கட்டணங்கள் மற்றும் பண்டம் மற்றும் பிற பெறுமதி சேர் சேவைகள் தொடர்பான கட்டணங்களுக்கு www.mcb.com.lk ஐப் பார்வையிடவும் (வங்கி கட்டணங்களின் அட்டவணை) |
| தகைமைகள் | தனிநபர் - இலங்கையில் வதியும் 18 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் (தனிநபர்/ கூட்டு) |
| | நிறுவனங்கள் - அந்தந்த நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் |
| அவசியமான ஆவணங்கள் | சரியாக பூர்த்தி செய்யப்பட்ட கணக்கைத் திறப்பதற்கு தேவையான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் தொடர்புடைய படிவங்கள் |
| தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு | செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது தேசிய அடையாள அட்டையுடன் கூடிய கடவுச்சீட்டு (கணக்குகளைத் திறக்க/ செயல்படுத்தத் தகுதியுள்ள வெளிநாட்டுப் பிரஜைகள் செல்லுபடியாகும் விசாவை வழங்க வேண்டும்) |
| | முகவரிச் சான்று (தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலிருந்து வேறுபட்டால்) |
| நிறுவன வாடிக்கையாளர்களுக்கு | வியாபாரப் பதிவு மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்/ படிவங்கள் |
| | பணிப்பாளர்கள்/ பங்குதாரர்களின் அடையாள ஆவணங்கள் |
| | வங்கிக்கு, தனிநபர் அல்லது நிறுவனத்தின் அடையாளத்தை நிரூபிப்பதற்கு வேறு ஏதேனும் ஆவணம் (தேவைப்பட்டால்) |
| கணக்கினைத் திறப்பதற்கான நடைமுறை | கணக்கைத் திறக்க மற்றும் ஏனைய பெறுமதி சேர் சேவைகளைப் பெறுவதற்கு தயவுசெய்து அருகிலுள்ள எம்சீபி வங்கிக் கிளைக்குச் சென்று முழுமையான ஆவணங்களை ஒப்படைக்கவும் |
| ஏனைய தொழிற்பாட்டு தகவல்கள்/ நியதிகள் மற்றும் நிபந்தனைகள் | எந்தவொரு எம்சீபி வங்கி கிளை மூலமாகவும் வைப்புகள்/ மீளப் பெறுதல் அனுமதிக்கப்படுகிறது. |
| | திருப்திகரமான நிலை அல்லது சட்டப்பூர்வ தேவைகளை பூர்த்தி செய்து பராமரிக்கப்படாத எந்தக் கணக்கையும் நிறுத்தி வைத்திருக்க/ மூடுவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு |
| | எந்த வாடிக்கையாளர் பரிவர்த்தனைகளும் இல்லாது 02 வருடங்களுக்கு மேலாக செயல்படாமல் இருக்கும் கணக்குகள் உறங்கல் கணக்குகளாக வகைப்படுத்தப்படும். (காலம் அவ்வப்போது மாறுபடலாம்) |
| | 10 ஆண்டுகள் செயலற்ற நிலையில் இருக்கும் கணக்குகள் கைவிடப்பட்டதாகக் கருதப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டுதல்களின்படி கையாளப்படும். |
| | இலங்கை மத்திய வங்கியின் வைப்புத்தொகை காப்புறுதித் திட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்கு இணங்க வைப்புக்கள் பாதுகாக்கப்படுகின்றன. |
| | இணக்கத்திற்காக/ தவறுகைகளை மீளத் திருப்பலுக்காக/ அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளுக்காக ஏதேனும் தவறான/அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் எழுத்துப்பூர்வமாக கிளைக்குத் தெரிவிக்க வேண்டும். |
| | வங்கியின் உள் கொள்கைகள்/ செயல்முறைகள் மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின்படி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அவ்வப்போது மாறக்கூடும், மேலும் அவை வங்கியின் இணையதளம்/ கிளை அறிவித்தல் பலகைகளில் அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான ஊடகம் மூலம் முன்கூட்டியே அறிவிக்கப்படும். |
| மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஊடகங்கள் | எம்சீபி வங்கிக் கிளைகளுக்கு அழைப்பை மேற்கொள்ளுங்கள் /விஜயம் செய்யுங்கள்\|இணையத்தளம்: www.mcb.com.lk \| ஹொட்லைன்: 011 5222 200 \| மின்னஞ்சல் : info@mcb.com.lk |
| முறைப்பாடுகளை கையாளும் நடைமுறை | எந்த எம்சீபி வங்கி கிளை மூலமாகவும் புகார்களை அனுப்பலாம் (பிரத்தியோக புகார் பெட்டி உள்ளது) |
| | கிளை மட்டத்தில் உங்கள் முறைப்பாடு தீர்க்கப்படாவிட்டால், நீங்கள் கீழே குறிப்பிடப்பட்ட திணைக்களத்திற்கு உங்கள் முறைப்பாட்டைச் சமர்ப்பிக்கலாம். தொலைபேசி : 011 5222 230 \| மின்னஞ்சல் : complaints@mcb.com.lk |
| | தீர்மானம் உங்களுக்கு திருப்திகரமாக இல்லாவிட்டால்/ 04 வாரங்களுக்குள் தீர்க்கப்படாவிட்டால், நீங்கள் புகாரை பின்வருமாறு விரைவுபடுத்தலாம்: நிதி ஓம்புட்ஸ்மேன், இல.01, பெதஸ்தா பிளேஸ், மிலாகிரிய, கொழும்பு - 05 தொலைபேசி: 011 2595 624 \|மின்னஞ்சல் : fosril@sltnet.lk \|இணையத்தளம்: www.financialombudsman.lk |

**எம்சீபி வங்கி லிமிடட் என்பது இலங்கை மத்தியவங்கியின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.**
**கடன் மதிப்பீடு: "AA- (lka)" | Outlook Stable (Fitch Ratings)**